# மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம்

**சென்னை, ஆக. 13:** சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கு பங்கு மூலத்தனம், அதற்கு இணையான மத்திய அரசின் பங்கை விரைந்து வழங்குமாறு மத்திய அரசை வலியுறுத்தப்படும். மெட்ரோ ரயில் திட்டத்தில் சென்னை கோடம்பாக்கம் முதல் பூந்தமல்லி புறவழித்தடத்துக்கான சேவை 2025-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டம் மொத்தம் 2026-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் முடிக்கப்படும்.

மெட்ரோ ரயில் திட்டத்தை தாம்பரம் வழியாக விமான நிலையத்திலிருந்து கிளம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிக்கும் பணி தொடங்கப்படும். கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தை அமைப்பது குறித்து மத்திய அரசுடன் கலந்தாலோசித்து விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயார் செய்யப்படும்.